[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நிலக்கோட்டை, நத்தம் ஆகிய பகுதிகளில் 38,940 டன்கள் வரை தக்காளி விளைச்சல் இருக்கிறது. தக்காளித் தூள், தக்காளிச் சாறு, தக்காளித் தொக்கு மற்றும் தக்காளிப் பொடி ஆகியவைகளை இதன்மூலம் தயாரிக்க தமிழகத்திலே 165-க்கு மேற்பட்ட தொழில் மையங்கள் உள்ளன.

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அங்கே அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்றாலும் தக்காளிப் பழங்களை சில நாட்களுக்காவது கெட்டுப்போகாமல் இருக்கும் வண்ணம் பாதுகாக்கிற வகையில் குளிர்சாதனப் பெட்டியை அங்கே தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தர்மபுரி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பில் 10,000 டன் கொள்ளளவு கொண்ட பழங்கள் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் அமைப்பதற்கு உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது. இத்தொழில் கூடத்தில் தக்காளி பதப்படுத்தும் தொழிலும் சேர்க்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 534, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

534—

சேலம் மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் வழங்கப்பட்ட செடிகள்

* 16532—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த ஓராண்டு காலமாக தோட்டக் கலைத் துறை மூலமாக எவ்வளவு செடிகள் என்னென்ன வகையில் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கு அரசு வழங்கிய மானியம் எவ்வளவு?

1993 ஏப்ரல் 2]

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டத்தில் 1991–92ஆம் ஆண்டு மா ஒட்டுச் செடிகள் 1,20,000 செடிகளும், கொய்யா 23,100 செடிகளும் , சப்போட்டா 4,805 செடிகளும், எலிமிச்சை 4,202 செடிகளும், மாதுளை 10,323 செடிகளும், இதரச் செடிகள் 1,62,030 கன்றுகளும், சாத்துக்குடி 820 செடிகளும், எல்லாச் செடிகளும் கலந்து 65,000 எண்கள் செடிகளும் ரூ. 3.90 லட்சம் செடிகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 50 சதம் மான்ய விலையில் செடிகள் வழங்க ரூ. 15.5 இலட்சமும், 100 சத மான்ய விலையில் வழங்க ரூ. 60,000-மும், நலிவடைந்த தோட்டங்களைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் 100 சத மான்ய விலையில் வழங்க ரூ. 19,229-மும் கிராமப்புறங்களில் சத்துணவுத் தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ. 3.00 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 19.29 லட்சம் சேலம் மாவட்டத்திற்கு செலிவிடப்பட்டுள்ளது.

திரு.கு. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எவ்வளவு செடிகள் வழங்கப்பட்டன. எவ்வளவு மானியம் வழங்கப் பட்டது என்ற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு செடிகளும் தற்போது உயிரோடு இருக்கின்றனவா? அல்லது இது ஏதோ புள்ளிவிவர கணக்காக கொடுக்கப்பட் டிருக்கிற கணக்கா என்பதை ஆய்வு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செடிகள் எல்லாம் அரசு பண்ணைகளில் வளர்க்கப்பட்டவை. விவசாயிகளுக்கு, நலி வுற்றவர்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு, பழங்குடி மக்க ளுக்கு இந்தச் செடிகளை வளர்ப்பதற்கு அரசாங்கம் தந்து இருக்கிறது. இந்தச் செடிகளை வளர்க்க வேண்டு மென்று நல்ல உயர்ந்த நோக்கத்தோடு தான் விவசாயப் பெருங்குடி மக்கள் பெற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் 'மினிக்கிட்டு' போன்ற உரங்களும் அரசு தந்து கொண்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக எத்தனை செடிகள் மடிந்து இருகின்றன. எத்தனை உயிரோடு இருக்கின்றன என்ற புள்ளிவிவரம் அரசிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் அரசு ஆய்வு செய்து விடை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 29

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இவ்வளவு மானியம் வழங்கியும், தோட்டக் கலைத் துறை மூலமாக இவ்வளவு அலுவலர்கள் இருந்தும், தனியார்த் துறை மூலமாக விற்பனையாவது தான் அதிகமாக இருக்கிறது. தோட்டக்கலைத் துறை மூலமாக விற்பனை யாவதை விட தனியார்த் துறை நர்சரிகள் அங்கே சேலம் மாவட்டம் முழுவதும் நிறைய இலாபகரமாக இயங்கிக்கொண் டிருப்பதன் காரணம், இந்தத் தோட்டக் கலைத் துறை அலுவலர்கள் மூலமாக வழங்கப்படுவது தரம் குறைந்தது என்பதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறையின் மூலமாக வழங்கப்பட்ட செடிகள் தரம் குறைந்தது என்று இதுவரையில் அரசுக்கு எந்தக் குறையும் வந்தது இல்லை. தரமான செடிகளைத் தான் இன்றுவரையில் அரசு வழங்கிக் கொண் டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் ரோட்டு ஓரங்களில் கூட சிலர் தனியாக நர்சரி கார்டன் என்று வைத்திருக் கிறார்கள். சிலர் தள்ளுவண்டியில் காய்கறி செடிகளையும். பூச்செடிகளையும் வைத்து தள்ளிக்கொண்டு வருகிறார்கள் அவர்களைப் பார்த்து மக்கள் ஏமாந்து அவைகளை வாங்கி வைத்ததற்குப் பின்னால், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்து, அவை பலன் தரவில்லை என்ற நிலை கண்டு வருத்தம் அடைகிறார்கள். எனவே, இதைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான், கடந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது ஒரு சட்ட முன்வடிவு வரக்கூடிய ஆண்டில் கொண்டு வரப்படும் என்று இந்த பேரவையில் நான் அறிவித்தேன். தனியார் வளர்க்கக் கூடிய நர்சரிகளை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டமுன்வடிவு, வருகிற ஆண்டில் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு இங்கே தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 535 தி. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.